Digitization by eGangotri-South Center

वदतु संस्कृतम्

ஸம்ஸ்க்ருதத்தில் பேசுங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதிப்பாளர்:

ஸம்ஸ்க்ருத பாரதி

5,7-வது தெரு,
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி - 044 - 28472632

முதற்பதிப்பு : நவம்பர் 1998
5,000 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு : மார்ச் 1999
10,000 பிரதிகள்

மூன்றாம் பதிப்பு : நவம்பர் 2000
20,000 பிரதிகள்

நான்காம் பதிப்பு : அக்டோபர் 2002
30,000 பிரதிகள்

ஐந்தாம் பதிப்பு : ஜூலை 2005
20,000 பிரதிகள்

விலை : ரூ. 5.00

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முன்னுரை

ஸம்ஸ்க்ருதம் தொன்மையானதும் கருத்தாழமும் மிக்கது. மிகச் சிறந்ததும், தெய்வீகமானதும், நமது கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்ததுமான மொழி என்றெல்லாம் இம்மொழியின் சிறப்பினைப் போற்றிப் புகழுகிறார்கள் மக்கள். இப்புகழுரையினால் மட்டுமே ஸம்ஸ்க்ருதம் வளம் பெற்றுவிடாது. அன்றாட வாழ்வில் இம்மொழியினைப் பயன்படுத்துவதன் மூலமாகத்தான் இம்மொழியினை வளர்த்து வழக்கிலுள்ளதாக, ஜீவிதமொழியாகச் செய்ய முடியும். எனவே நாம் ஸம்ஸ்க்ருதத்தைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு ஸம்ஸ்க்ருதத்தில் பேசுவோம்.

குழந்தையானது மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு எப்படிப் பேசுகிறதோ, அதுபோல செவி வழியாகக் கேட்டும், பேசிப்பழகியும் ஸம்ஸ்க்ருதத்தை நாம் கற்கலாம். புத்தகங்கள் படிக்காமலும், இலக்கண சூத்திரங்கள் அறியாமலும் பேசுவதின் மூலமாக எளிமையாக ஸம்ஸ்க்ருதத்தைப் பயிலலாம். ஆகவே நாம் ஸம்ஸ்க்ருதத்திலேயே பேசுவோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நாம் எங்கே ஸம்ஸ்க்ருதத்தில் பேசலாம் எனும் வினாவிற்கு விடை யாதெனில் கல்விச்சாலைகளில், வகுப்புகளில் மட்டுமல்லாமல்; வீட்டில், அலுவலகங்களில், தொழிற்சாலைகளில், சாலைகளில், கடைவீதிகளில் என எங்கெல்லாம் நாம் செல்கிறோமோ அங்கெல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் பேசலாம். விளையாட்டுத் திடலிலேயோ, உணவு மேஜையிலோ, தொலைபேசியிலோ, எந்த இடமானாலும் ஸம்ஸ்க்ருதத்திலேயே பேச வேண்டும். ஒருவர் மாணாக்கரிடமும், தாய், தந்தை, சகோதர, சகோதரிகளிடமும், கணவன் அல்லது மனைவியிடத்திலும், நண்பர்களிடத்திலும், அலுவலக அதிகாரிகளிடத்திலும், சேவகர்களிடத்திலும் ஸம்ஸ்க்ருதத்தில் பேசலாம், பேசவும் வேண்டும்.

ஜாதி மத பேதங்களை மறந்து ஸம்ஸ்க்ருதத்தில் பேச வேண்டும்.

ஸம்ஸ்க்ருதத்தைப் பயில சிறந்த முறை ஸம்ஸ்க்ருதத்தில் பேசுவதே. பேசுவது எப்படி என்பதற்கு எடுத்துக்காட்டான வாக்கியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இச்சிறு புத்தகம். இது போதுமானதல்ல என்றாலும் ஸம்ஸ்க்ருதத்தில் பேசும் முறையைப் பற்றிய ஓர் எண்ணத்தைத் தூண்ட உதவுகிறது. ஒவ்வொருவரின் இரத்தத்துளிகளிலும் ஸம்ஸ்க்ருதம் உள்ளது. அதை வெளிப்படுத்த சரியோ, தவறோ ஸம்ஸ்க்ருதத்தில் பேசி பெருமிதம் அடைவோம்.

கடந்த காலத்தில் நம் முன்னோர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் பேசி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று நமது தேசத்தில் இம்மொழியில் வ்யவஹாரம் செய்வது மிகவும் அரிதாகிவிட்டது. இப்பொழுது நமக்குத் தேவை மீண்டும் ஸம்ஸ்க்ருதத்தை அன்றாட வழக்கில் கொண்டு வரவேண்டும் எனும் உறுதி.

"இச்சாதனையை நிகழ்த்த நமக்குத் தேசீய விழிப்புணர்வைத் தந்தருள" எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

-பதிப்பாளர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

वदतु संस्कृतम् (ஸம்ஸ்க்ருதத்தில் பேசுங்கள்)

வதது ஸம்ஸ்க்ருதம்

नमस्ते / नमस्कारः - நமஸ்காரம்
நமஸ்தே/நமஸ்கார:

वन्दनम् - வணக்கம்
வந்தனம்

धन्यवादः - நன்றி
தன்யவாத:

स्वागतम् - நல்வரவு
ஸ்வாகதம்

क्षम्यताम् - மன்னிக்கவும்
க்ஷம்யதாம்

चिन्ता मास्तु - கவலை வேண்டாம்
சிந்தா மாஸ்து

कृपया - தயவுசெய்து
க்ருபயா

पुनः मिलामः - மீண்டும் சந்திப்போம்
புன: மிலாம:

अस्तु - சரி
அஸ்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

उत्तमम्/शोभनम् - நன்று
உத்தமம்/சோபனம்

बहु उत्तमम् - மிக்க நன்று
பஹு உத்தமம்

भवतः नाम किम्? - உங்களுடைய (ஆண்) பெயர் என்ன?
பவத: நாம கிம்?

भवत्याः नाम किम्? - உங்களுடைய (பெண்) பெயர் என்ன?
பவத்யா: நாம கிம்?

मम नाम..... - என் பெயர்.....
மம நாம

एषः मम स्नेहितः - இவர் என் நண்பர்
ஏஷ: மம ஸ்நேஹித:

एषा मम सखी - இவள் என் தோழி
ஏஷா மம ஸகீ

भवान्/भवती कस्यां कक्ष्यायां पठति ? - நீர்/நீங்கள் (ஆண்/பெண்) எந்த வகுப்பில் படிக்கிறீர்?
பவான்/பவதீ கஸ்யாம் கக்ஷ்யாயாம் படதி?

अहं पञ्चम कक्ष्यायां पठामि - நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன்.
அஹம் பஞ்சம கக்ஷ்யாயாம் படாமி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

भवतः ग्रामः/भवान् - உங்களுடைய சொந்த
कुत्रत्यः ? ஊர்?
பவத: க்ராம:/பவான்
குத்ரத்ய: ?

अहं सेलं नगरवासी - நான் சேலம் நகரவாசி.
அஹம் சேலம் நகரவாசீ

कुतः आगच्छति? - எங்கிருந்து வருகிறாய்?
குத: ஆகச்சதி? (ஆண், பெண்)

विद्यालयतः	பள்ளியிலிருந்து		
வித்யாலயத:			
गृहतः	வீட்டிலிருந்து	आगच்छामि	வருகிறேன்
க்ருஹத:		ஆகச்சாமி	
.....तः		... இருந்து	
.....तः			

कुत्र गच्छति? எங்கே போகிறாய்?
குத்ர கச்சதி?

देवालयं	கோயிலுக்கு		
தேவாலயம்		गच्छामि	
		கச்சாமி	போகிறேன்
कार्यालयं	அலுவலகத்திற்கு		
கார்யாலயம்			

स्वल्पम् - கொஞ்சம்
ஸ்வல்பம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अहं न जानामि - எனக்குத் தெரியாது.
அஹம் ந ஜானாமி

किमर्थं न भवति ? - ஏன் நடக்காது?
கிமர்த்தம் ந பவதி?

अथ किम् ? - அதற்குப் பிறகு?
அத கிம் ? (பிறகு என்ன?)

नैव खलु - கிடையாதே
நைவ கலு

आगच्छतु - வாருங்கள்
ஆகச்சது

उपविशतु - உட்காருங்கள்
உபவிசது

ज्ञातम् ? - புரிந்ததா?
ஞாதம் ?

कथम् आसीत् ? - எப்படி இருந்தது?
கதம் ஆஸீத் ?

कार्यक्रमः कदा ? - நிகழ்ச்சி எப்பொழுது?
கார்யக்ரம: கதா ?

अद्य एव किम् ? - இன்றைக்கேவா?
அத்ய ஏவ கிம்?

अद्य न, श्वः । - இன்று இல்லை, நாளை.
அத்ய ந, ச்வ:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तद् ह्यः एव समाप्तम् - அது நேற்றே
தத் ஹ்ய: ஏவ ஸமாப்தம முடிந்துவிட்டது

इदानीम् एव ? - இப்போதேவா?
இதானீம் ஏவ?

आम् इदानीम् । - ஆமாம். இப்போதே.
ஆம் இதானீம்

प्राप्तं किम् ? - கிடைத்ததா?
ப்ராப்தம் கிம்?

कस्मिन् समये ? - எத்தனை மணிக்கு?
கஸ்மின் சமயே?

पञ्चवादने - ஐந்து மணிக்கு.
பஞ்ச வாதனே

न आवश्यक் - தேவையில்லை.
ந ஆவச்யகம்

महान् आनन्दः - மிக்க மகிழ்ச்சி.
மஹான் ஆனந்த:

प्रयत्नं करोमि । - முயற்சி செய்கிறேன்.
ப்ரயத்னம் கரோமி

न शक्यते भोः - இயலவில்லை ஐயா.
ந சக்யதே போ:

तथा न वदतु - அப்படிச் சொல்லாதீர்கள்
ததா ந வதது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कदा ददाति ? - எப்பொழுது தருவாய்?
கதா ததாதி

अहं किं करोमि ? - நான் என்ன செய்வேன்?
அஹம் கிம் கரோமி?

कति जनाः सन्ति ? - எத்தனை பேர்
கதி ஜனா: சந்தி? இருக்கிறார்கள்?

पुनः आगच्छतु । - மீண்டும் வாருங்கள்.
புன: ஆகச்சது

अवश्यम् आगच्छामि - நிச்சயம் வருகிறேன்.
அவச்யம் ஆகச்சாமி

भवान् कथम् अस्ति ?- தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்?
பவான் கதம் அஸ்தி ?

गृहे सर्वं कुशलं किम् ? - வீட்டில் எல்லோரும்
க்ருஹே ஸர்வம் சௌக்கியமா?
குசலம் கிம்?

आम् सर्वं कुशलम् । - ஆமாம், எல்லோரும்
ஆம், ஸர்வம் குசலம் சௌக்கியம்.

का वार्ता ? - என்ன சமாசாரம்?
கா வார்த்தா?

भवान् एव श्रावयतु - நீங்களே சொல்லுங்கள்.
பவான் ஏவ ச்ராவயது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

किं मेलनं बहु विरलं जातम् ?
தங்களின் சந்திப்பு மிக அரிதாகிவிட்டது.
கிம் மேலனம் பஹு விரலம் ஜாதம்?

आगच्छतु, उपविशतु । - வாருங்கள், உட்காருங்கள்.
ஆகச்சது, உபவிசது.

जलम् आनयामि वा? - தண்ணீர் கொண்டு வரவா?
ஜலம் ஆனயாமி வா?

मास्तु/नैव - வேண்டாம்.
மாஸ்து/நைவ

कथम् आगमनम् अभवत्? - எப்படி வந்தீர்கள்?
கதம் ஆகமனம் அபவத்?

मार्गः विस्मृतः किं ? வழி மறந்துவிட்டதா?
மார்க: விஸ்ம்ருத: கிம்?

चायं पिबति वा ? - டீ குடிக்கிறீர்களா?
சாயம் பிபதி வா?

नैव इदानीमेव पीत्वा आगच्छामि । - வேண்டாம். இப்பொழுதுதான் குடித்துவிட்டு வருகிறேன்.
நைவ இதானீமேவ பீத்வா ஆகச்சாமி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

शैत्यम् अस्ति, स्वल्पं - குளிராக இருக்கிறது.
चायं पिबतु கொஞ்சம் டீ குடியுங்கள்.
சைத்யம் அஸ்தி,
ஸ்வல்பம் சாயம் பிபது

भवतु नाम । - சரி
பவது நாம

इदानीं मया गन्तव्यम् - இப்பொழுது நான் செல்ல
இதானீம் மயா வேண்டும்.
கந்தவ்யம்

तिष्ठतु, भोजनं कृत्वा - இருங்கள், சாப்பிட்டு
गच्छतु । விட்டுப் போகலாம்.
திஷ்டது, போஜனம்
க்ருத்வா கச்சது.

न, इदानीं भोजनं न - இல்லை, இப்பொழுது
करोमि । சாப்பிடமாடடேன்
ந, இதானீம்
போஜனம் ந கரோமி.

न, भोजनस्य समयः । - இல்லை, சாப்பிடும் நேரம்தான்.
ந, போஜனஸ்ய சமய:

न, पुनः कदाचित् - இல்லை, இன்னொரு
खादामि । நாள் சாப்பிடுகிறேன்.
ந, புன: கதாசித் காதாமி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

पुनः कदा मेलिष्यामः ? - மீண்டும் எப்பொழுது
புன: கதா மேலிஷ்யாம:? சந்திப்போம் ?

भवान् किं करोति ? - தாங்கள் என்ன
பவான் கிம் கரோதி? செய்கிறீர்கள்?

अहम् आचार्यः अस्मि । - நான் ஆசிரியன்.
அஹம் ஆசார்ய: அஸ்மி.

अहं यन्त्रागारे कार्यं करोमि।- நான் தொழிற்சாலையில்
அஹம் யந்த்ராகாரே வேலை செய்கின்றேன்.
கார்யம் கரோமி.

कार्यालये - அலுவலகத்தில்	न्यायालये - நீதிமன்றத்தில்
கார்யாலயே	ந்யாயாலயே
वित्तकोषे - வங்கியில்	आपणे - கடையில்
வித்தகோஷே	ஆபணே

कृपया पुस्तकं ददातु - தயவுசெய்து புத்தகத்தைக்
க்ருபயா புஸ்தகம் கொடுங்கள்.
ததாது.

राकेशः अस्ति किं ? - ராகேஷ் இருக்கிறாரா?
ராகேச: அஸ்தி கிம்?

CC-0. In Public Domain. Muddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मम वचनं श्रुणोतु । - என் பேச்சைக் கேள்.
மம வசனம் ச்ருணோது.

भवतः का हानिः ? - உனக்கு என்ன கஷ்டம்?
பவத: கா ஹானி:?

तत्र सम्यक् पश्यतु । - அங்கே நன்றாகப் பார்.
தத்ர சம்யக் பச்யது.

सा किं पृच्छति ? - அவள் என்ன கேட்கிறாள்?
ஸா கிம் ப்ருச்சதி?

अहं भवन्तं न त्यजामि । - நான் உன்னை விடப் போவதில்லை.
அஹம் பவந்தம் ந த்யஜாமி.

फलं तु खादतु । - பழத்தையாவது சாப்பிடுங்கள்.
பலம் து காதது.

तिष्ठतु, इदानीमेव ददामि । - இருங்கள், இப்போதே தருகிறேன்.
திஷ்டது, இதானீமேவ ததாமி.

सम्यक् स्थापयतु, नो चेत् पतति । - நன்றாக வை, இல்லையென்றால் விழுந்துவிடும்.
சம்யக் ஸ்தாபயது, நோ சேத் பததி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अहं पुस्तकं विद्यालयं नयामि ।
அஹம் புஸ்தகம் வித்யாலயம் நயாமி.
- நான் புத்தகத்தைப் பள்ளிக்குஎடுத்துச் செல்கிறேன்.

सः संस्कृतवार्तां शृणोति ।
ஸ: ஸம்ஸ்க்ருத வார்தாம் ச்ருணோதி.
- அவர் ஸம்ஸ்க்ருத செய்தியை கேட்கிறார்.

अहं तं प्रेषयामि ।
அஹம் தம் ப்ரேஷயாமி.
- நான் அவரை அனுப்புகிறேன்.

माता वस्त्रं प्रक्षालयति ।
மாதா வஸ்திரம் ப்ரக்ஷாலயதி.
- தாயார் துணி துவைக்கிறார்கள்.

भवान् प्रातः कदा उत्तिष्ठति ?
பவான் ப்ராத: கதா உத்திஷ்டதி?
- நீங்கள் காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பீர்கள்?

भवतः नाम न स्मरामि ।
பவத: நாம ந ஸ்மராமி
- உங்கள் பெயர் நினைவில்லை.

किञ्चित् कालं स्यूतं गृह्णातु ।
கிஞ்சித் காலம் ஸ்யூதம் க்ருஹ்ணாது.
- கொஞ்ச நேரம் பையை வைத்திருங்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

किमर्थं भवती रोदिति ? - நீங்கள் (பெண்) ஏன்
கிமர்த்தம் பவதீ ரோதிதி? அழுகிறீர்கள்?

सः मिष्टान्नं बहु इच्छति । - அவன் இனிப்புப் பண்டத்தை
ஸ: மிஷ்டான்னம் பஹு மிகவும் விரும்புகிறான்.
இச்சதி.

सा तत् कार्यं कर्तुं न - அவள் அந்த வேலையைச்
शक्नोति । செய்ய இயலாதவள்.
ஸா தத் கார்யம் கர்த்தும்
ந சக்னோதி.

अतिथिः आगतवान् । - விருந்தாளி வந்திருக்கிறார்.
पितरम् आह्वयतु । தகப்பனாரைக் கூப்பிடு.
அதிதி: ஆகதவான்
பிதரம் ஆஹ்வயது.

किं कर्तुं शक्यते ? - என்ன செய்ய முடியும்?
கிம் கர்த்தும் சக்யதே?

कुत्रापि न दृश्यते खलु? - எங்குமே தென்-
குத்ராபி ந த்ருச்யதே படவில்லை
கலு? அல்லவா?

किम्, अहम् अन्तः - நான் உள்ளே வரலாமா?
आगन्तुं शक्नोमि?
கிம், அஹம் அந்த:
ஆகந்தும் சக்னோமி?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तत् किम् इति अहं ज्ञातुम् इच्छामि
தத் கிம் இதி அஹம் ஞாதுமிச்சாமி.
- அது என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

कृपया लेखितुं प्रयत्नं करोतु ।
க்ருபையா லேகிதும் ப்ரயத்னம் கரோது.
- தயவுசெய்து எழுத முயற்சி செய்யுங்கள்.

तत्र गत्वा आगच्छतु ।
தத்ர கத்வா ஆகச்சது.
- அங்கு சென்று (பிறகு) வாருங்கள்.

आचार्यं दृष्ट्वा चर्चां करोतु ।
ஆசார்யம் த்ருஷ்ட்வா சர்சாம் கரோது.
- ஆசிரியரைப் பார்த்து விவாதம் செய்யுங்கள்.

पृष्ट्वा वदामि ।
ப்ருஷ்ட்வா வதாமி
- கேட்டுச் சொல்கிறேன்.

तत् श्रुत्वा बहु दुःखम् अभवत् ।
தத் ச்ருத்வா பஹு துக்கம் அபவத்.
- அதைக் கேட்டு மிகவும் வேதனையாக இருந்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

स्नानं कृत्वा एव भोजनं करोमि ।
ஸ்நானம் க்ருத்வா ஏவ போஜனம் கரோமி.
- குளித்து விட்டுத்தான் சாப்பிடுவேன்.

भवती वार्तां श्रुतवती किम्?
பவதீ வார்தாம் ச்ருதவதீ கிம்?
- நீங்கள் (பெண்) செய்தியை கேட்டீர்களா?

अहं ज्ञातवान् यत् भवान् आगच्छति ।
அஹம் ஞாதவான் யத் பவான் ஆகச்சதி.
- நீங்கள் வருகிறீர்கள் என்று அறிந்தேன்.

कः दत्तवान्?
கः தத்தவான்?
- யார் கொடுத்தார்?

भवान् तु जानाति स्म ।
பவான் து ஜானாதி ஸ்ம.
- உங்களுக்குத் தெரிந்ததுதான்.

सर्वे प्रश्नं पृच्छन्ति स्म ।
சர்வே ப்ரச்னம் ப்ருச்சந்தி ஸ்ம
- அனைவரும் கேள்வி கேட்டார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

भवान् उक्तवान् यत्, तत्- भवतः समीपे नास्ति ।		நீங்கள் அது உங்களிடம் இல்லை என்று சொன்னீர்கள்.
பவான் உக்தவான் யத் தத் பவத: சமீபே நாஸ்தி		
किमपि न भवति ।	-	எதுவும் நடக்காது.
கிமபி ந பவதி.		
स्वीकरोतु	-	எடுத்துக் கொள்ளுங்கள்.
ஸ்வீகரோது.		
भोजनं सिद्धम्	-	உணவு தயார்.
போஜனம் ஸித்தம்		
परिवेषयतु ।	-	பரிமாறுங்கள்.
பரிவேஷயது.		
पर्याप्तम् ।	-	போதும்.
பர்யாப்தம்		
स्वल्पं ददातु	-	கொஞ்சம் கொடு.
ஸ்வல்பம் ததாது		
भोजनं बहु रुचिकरं अस्ति ।	-	உணவு மிகவும் ருசியாக இருக்கிறது.
போஜனம் பஹு ருசிகரம் அஸ்தி.		

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

आरोग्यं कथम् अस्ति ? - உடல்நிலை எப்படி
ஆரோக்யம் கதம் அஸ்தி? இருக்கிறது?

समीचीनं नास्ति । - சரியில்லை
ஸமீசீனம் நாஸ்தி.

किम् अभवत् ? - என்ன ஆயிற்று?
கிம் அபவத்?

ज्वर: कास: शिरोवेदना च - ஜ்ரம், இருமல்
ஜ்வர: காஸ: மற்றும் தலைவலி.
சிரோவேதனா ச

वैद्यं पश्यतु । - வைத்தியரைப் பாருங்கள்.
வைத்யம் பச்யது.

औषधं स्वीकृतवान् । - மருந்து சாப்பிட்டேன்.
ஔஷதம் ஸ்வீக்ருதவான்.

पूर्वमेव वक्तव्यमासीत् । - முன்பே சொல்ல
பூர்வமேவ வேண்டியிருந்தது.
வக்தவ்யமாஸீத்

मया न दातव्यमासीत् । - என்னால் ஒன்றும்
மயா ந தாதவ்யமாஸீத் கொடுக்கப்
படவேண்டியதில்லை.

सुन्दरं करणीयमासीत् । - நன்றாக
சுந்தரம் கரணீயமாஸீத் செய்யப்பட
வேண்டியிருந்தது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

यदि इच्छति, तर्हि स्वीकरोतु ।
यதி இச்சதி, தர்ஹி ஸ்வீகரோது.
- விரும்பினால் எடுத்துக்கொள்.

यदि समयः अस्ति, तर्हि कृपया आगच्छतु मया सह ।
யதி சமய: அஸ்தி தர்ஹி க்ருபயா ஆகச்சது மயா ஸஹ.
- நேரமிருந்தால் தயவுசெய்து என்னோடு வா.

यथा भवान् आदिशति, तथा करोमि ।
யதா பவான் ஆதிசதி, ததா கரோமி.
- எப்படி உத்தர விடுகிறீர்களோ அப்படியே செய்கிறேன்.

पश्यामि, किं साद्ध्यमिति ।
பச்யாமி, கிம் சாத்யமிதி.
- எது சாத்தியம் என்று பார்க்கிறேன்.

यदा सः आगमिष्यति तदा सूचयिष्यामि ।
யதா ஸ: ஆகமிஷ்யதி ததா சூசயிஷ்யாமி
- அவன் வரும்போது தகவல் தெரிவிக்கிறேன்.

अहं स्कूटर्यानेन गमिष्यामि ।
அஹம் ஸ்கூட்டர் யானேன கமிஷ்யாமி.
- நான் ஸ்கூட்டரில் போவேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

सः सम्भवतः रैलयानेन- अवन் ஒரு வேளை
आगमिष्यति । ரயிலில் வரலாம்.
ஸ: சம்பவத:
ரயில்யானேன ஆகமிஷ்யதி.

भवान् तेन सह आगच्छतु - நீங்கள் அவனோடு
பவான் தேன ஸஹ வாருங்கள்.
ஆகச்சது.

भवता/भवत्या विना - தாங்கள் (ஆண்/பெண்)
कार्यं न भवति । இல்லாமல் வேலையே
பவதா/பவத்யா நடக்காது.
வினா கார்யம் ந பவதி.

एतत् भोजनस्य अनन्तरं - இதை சாப்பிட்ட பின்
कुर्मः । செய்வோம்.
ஏதத் போஜனஸ்ய
அனந்தரம் குர்ம:

अहं न आगतवती, यतः - நான் (பெண்)
मम आरोग्यं उत्तमं न வரவில்லை. ஏனெனில்
आसीत् । எனக்கு உடல்நிலை
அஹம் ந ஆகதவதீ, சரியில்லை.
யத: மம ஆரோக்யம்
உத்தமம் ந ஆஸீத்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



त्रिवादनम्
த்ரிவாதனம்



सपादचतुर्वादनम्
ஸபாதசதுர்வாதனம்



सार्धचतुर्वादनम्
ஸார்தசதுர்வாதனம்



पादोन पञ्चवादनम्
பாதோன பஞ்சவாதனம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



पञ्च-अधिक
त्रिवादनम्
பஞ்ச அதிக
த்ரிவாதனம்



पञ्च-ऊन
त्रिवादनम्
பஞ்ச ஊன
த்ரிவாதனம்



विंशति-अधिक
द्विवादनम्
விம்சதி அதிக
த்விவாதனம்



चत्वारिंशद्-अधिक
त्रिवादनम्
சத்வாரிம்சத்
அதிக த்ரிவாதனம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कः समयः ? - மணி என்ன?
க: சமய:?

कदा गन्तव्यम् ? - எப்பொழுது போக வேண்டும்?
கதா கந்தவ்யம்?

समये आगच्छतु । - நேரத்தோடு வாருங்கள்.
சமயே ஆகச்சது.

रविवासरे कः दिनाङ्कः ? - ஞாயிற்றுக்கிழமை என்ன தேதி?
ரவிவாஸரே க: தினாங்க:?

पञ्चदशदिनाङ्के कः वासरः ? - பதினைந்தாம் தேதி என்ன கிழமை?
பஞ்சதச தினாங்கே க: வாஸர:?

षड्तः अष्ट पर्यन्तम् । - ஆறிலிருந்து எட்டு வரை.
ஷட்த: அஷ்ட பர்யந்தம்.

शाटिका சாடிகா	- புடவை	वेष्टिः வேஷ்டி:	- வேட்டி
चोलः சோல:	- பிளவுஸ் (ரவிக்கை)	करवस्त्रम् கரவஸ்த்தரம்	- கைக்குட்டை
निचोलः நிசோல:	- பாவாடை	राङ्कवम् ராங்கவம்	- மேல் துண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

युतकम् - சட்டை
யுதகம்

ऊरुकम् - பேண்ட்
உரூகம்

पादत्राणम् - ஷூ
பாதத்ராணம்

पादकोशः - சாக்ஸ்
பாதகோச:

दर्पणः - கண்ணாடி
தர்பண:

कङ्कतम् - சீப்பு
கங்கதம்

सुवासः - வாசனை
ஸுவாஸ: பௌடர்

तैलम् - எண்ணெய்
தைலம்

स्नानफेनकम् - குளியல்சோப்பு
ஸ்னானபேனகம்

वस्त्रफेनकम् - சலவைசோப்பு
வஸ்திரபேனகம்

शिरस्त्रम् - தொப்பி
சிரஸ்த்ரம்

पादरक्षा - செருப்பு
பாதரக்ஷா

दन्तकूर्चः - டூத்ப்ரஷ்
தந்தகூர்ச:

दन्तफेनः - டூத்பேஸ்ட்
தந்தபேன:

दन्तचूर्णम् - பற்பொடி
தந்தசூர்ணம்

लेखनी - பேனா
லேகனீ

अङ्कनी - பென்சில்
அங்கனீ

कागदम् - காகிதம்
காகதம்

पुस्तकम् - புத்தகம்
புஸ்தகம்

पुनः पूरणी - ரீஃபில்
புன: பூரணீ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

स्थालिका - தட்டு
ஸ்தாலிகா

चमसः - ஸ்பூன்
சமஸ:

चषकः - டம்ளர்
சஷக:

छुरिका - கத்தி
சுரிகா

क्षुरपत्रम् - ப்ளேடு
க்ஷுரபத்ரம்

व्यजनम् - விசிறி (ஃபேன்)
வ்யஜனம்

दण्डदीपः - ட்யூப்லைட்
தண்டதீப:

विद्युद्दीपः - பல்ப்
வித்யுத்தீப:

पिञ्चः - ஸ்விட்ச்
பிஞ்ச:

करदीपः - கைவிளக்கு
கரதீப: (டார்ச்)

तण्डुलः - அரிசி
தண்டுல:

चणकः - கொத்துக்கடலை
சணக:

तिलः - எள்
தில:

सर्षपः - கடுகு
ஸர்ஷப:

गोधूमः - கோதுமை
கோதூம:

मुद्गः - பாசிப்பருப்பு
முத்க:

चूर्णम् - பொடி
சூர்ணம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

बन्धुवाचक शब्दाः உறவுமுறைச் சொற்கள்
பந்துவாசக சப்தா:

पिता/जनकः -தந்தை பிதா/ஜனக:	पितृव्यः - தந்தையின் பித்ருவ்ய: சகோதரர்
माता/अम्बा -தாயார் மாதா/அம்பா	श्वशुरः - மாமனார் ச்வசுர:
अग्रजः - அண்ணன் அக்ரஜ:	श्वश्रूः - மாமியார் ச்வச்ரூ:
अग्रजा - அக்காள் அக்ரஜா	स्नुषा - மருமகள் ஸ்னுஷா
अनुजः - தம்பி அனுஜ:	जामाता - மாப்பிள்ளை ஜாமாதா
अनुजा - தங்கை அனுஜா	श्यालः - மனைவியின் ச்யால: சகோதரன்
मातुलः - மாமா மாதுல:	देवरः - கணவனின் தேவர: சகோதரன்
मातुलानि - மாமி மாதுலானி	पुत्रः - மகன் புத்ர:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

पुत्री - மகள்
புத்ரீ

पौत्रः - பேரன்
பௌத்ர: (மகனின் மகன்)

दौहित्रः - பேரன்
தௌஹித்ர: (மகளின் மகன்)

पितामहः - தாத்தா
பிதாமஹ: (தந்தை வழி)

पितामही - பாட்டி
பிதாமஹீ (தந்தை வழி)

मातामहः - தாத்தா
மாதாமஹ: (தாய்வழி)

मातामही - பாட்டி
மாதாமஹீ (தாய்வழி)

भवान् न उक्तवान् किल । - நீங்கள் சொல்லவே
பவான் ந உக்தவான் கில- இல்லையே.

अहं किं करोमि ? - நான் என்ன செய்வேன்?
அஹம் கிம் கரோமி?

अहं न जानामि । - எனக்குத் தெரியாது.
அஹம் ந ஜானாமி. (நான் அறியேன்)

यथा भवान् इच्छति तथा - நீங்கள் எப்படி
யதா பவான் இச்சதி ததா விரும்புகிறீர்களோ
அப்படி.

भवतु, चिन्तां न करोतु । - சரி,
பவது, சிந்தாம் ந கரோது. கவலைப்படாதே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तेन किमपि न सिध्यति - அதனால் ஒன்றும்
தேன கிமபி ந சித்யதி ஆகிவிடாது.
सः सर्वथा अप्रयोजकः । - அவன் எதற்கும்
ஸ: ஸர்வதா அப்ரயோஜக: உதவாதவன்.
प्रयोजनम् एव नास्ति । - ப்ரயோஜனமேயில்லை.
ப்ரயோஜனம் ஏவ நாஸ்தி.
पुनरपि एकवारं प्रयत्नं - மீண்டும் ஒருமுறை
कुर्मः । முயற்சிப்போம்.
புனரபி ஏகவாரம்
ப்ரயத்தனம் குர்ம:
मौनमेव उचितम् । - மௌனமே நல்லது
மௌனமேவ உசிதம்
तद्विषये अहं किमपि न - அதைப்பற்றி நான் ஒன்றும்
वदामि । சொல்ல மாட்டேன்.
தத்விஷயே அஹம்
கிமபி ந வதாமி.
विचिन्त्य एव वक्तव्यम् । - யோசித்துத்தான் சொல்ல
விசிந்த்ய ஏவ வேண்டும்.
வக்தவ்யம்.
तर्हि समीचीनम् । - அப்படியென்றால் மிகவும்
தர்ஹி சமீசீனம் நல்லது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

एवं चेत् कथम् ? - அப்படியென்றால் எப்படி?
ஏவம் சேத் கதம்?

मां किञ्चित् स्मारयतु । - எனக்குக் கொஞ்சம்
மாம் கிஞ்சித் ஸ்மாரயது. ஞாபகப்படுத்து.

तम् अहं सम्यक् जानामि। - அவனை எனக்கு
தம் அஹம் ஸம்யக் நன்றாகத் தெரியும்.
ஜானாமி.

तदानीमेव उक्तवान् खलु? - அப்போதே
ததானீமேவ உக்தவான் சொன்னேனே?
கலு? (சொன்னானே)

कदा उक्तवान् भोः ? - எப்போது சொன்னாய் ?
கதா உக்தவான் போ:? (சொன்னான்)

यत्किमपि भवतु । - எதுவாக
யத்கிமபி பவது. இருந்தாலும் சரி.

सः बहु समीचीनः । - அவன் மிகவும்
ஸ: பஹு ஸமீசீன: நல்லவன்.

सः अतीव मूर्खः । - அவன் மிகவும்
ஸ: அதீவ மூர்க்: முரடன்.

तथैव इति न नियमः - அப்படியேதான்
ததைவ இதி ந நியம: என்று கட்டாயமில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कर्तुं शक्यं, किञ्चित् समयः अपेक्ष्यते ।	- செய்ய முடியும், ஆனால் சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது.
கர்தும் சக்யம், கிஞ்சித் சமய: அபேக்ஷ்யதே.	
एतावत् अपि कृतवान् ।	- இவ்வளவு வரை செய்திருக்கிறேன்.
ஏதாவத் அபி க்ருதவான்	
द्रष्टुमेव न शक्यते ।	- பார்க்கவே முடிவதில்லை.
த்ரஷ்டுமேவ ந சக்யதே.	
तत्रैव कुत्रापि स्यात् ।	- அங்குதான் எங்காவது இருக்கும்.
தத்ரைவ குத்ராபி ஸ்யாத்.	
यथार्थं वदामि ।	- உண்மையைச் சொல்கிறேன்.
யதார்தம் வதாமி. .	
एवं भवितुमर्हति ।	- இப்படி நடக்கலாம்/ இருக்கலாம்.
ஏவம் பவிதுமர்ஹதி	
कदाचित् एवमपि स्यात् ।	- ஒருவேளை இப்படியும் இருக்கலாம்.
கதாசித் ஏவமபி ஸ்யாத்.	
अहं तावदपि न जानामि वा ?	- நான் இதுகூட அறியாதவனா?
அஹம் தாவதபி ந ஜானாமி வா ?	

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कः न इच्छति ? - யார்தான் விரும்பமாட்டார்?
க: ந இச்சதி?

तत्र गत्वा किं करोति ?- அங்கே போய் என்ன
தத்ர கத்வா கிம் செய்கிறாய்?
கரோதி?

पुनः आगच्छन्तु । - மீண்டும் வாருங்கள்.
புன: ஆகச்சந்து.

मम कोऽपि क्लेशः - எனக்கு வருத்தம்
नास्ति । ஒன்றுமில்லை.
மம கோபி க்லேச: நாஸ்தி.

एतत् कष्टकरं न । - இது ஒன்றும் கஷ்டமில்லை
ஏதத் கஷ்டகரம் ந.

भोः, किम् आनीतवान् । - ஐயா, என்ன கொண்டு
போ: கிம் ஆனீதவான். வந்திருக்கிறீர்கள்.

भवन्तं, कः उक्तवान् ? - உங்களுக்கு யார்
பவந்தம், க: உக்தவான்? சொன்னது?

किञ्चिदनन्तरम् आगच्छेत्। - கொஞ்ச நேரம்
கிஞ்சிதனந்தரம் ஆகச்சேத். கழித்து வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

प्रायः तथा न स्यात् । - அப்படி ஒன்றும்
ப்ராய: ததா ந ஸ்யாத். இருக்காது.

चिन्ता मास्तु, श्वः - பரவாயில்லை.
ददातु । நாளை தா.
சிந்தா மாஸ்து ச்வ:
ததாது.

अहं पुनः सूचयामि । - நான் மறுபடியும்
அஹம் புன: ஸூசயாமி. தெரிவிக்கிறேன்.

अद्य आसीत् वा ? - இன்று இருந்ததா?/
அத்ய ஆஸீத் வா? நடந்ததா?

अवश्यम् आगच्छामि । - நிச்சயமாக
அவச்யம் ஆகச்சாமி வருகிறேன்.

रामः अस्ति वा ? - ராமன் இருக்கிறானா?
ராம: அஸ்தி வா?

किमर्थम् एवं जातम् ? - ஏன் இப்படி ஆயிற்று?
கிமர்த்தம் ஏவம் ஜாதம்?

किं तत्र आसीत् ? - அங்கே இருந்தது என்ன?
கிம் தத்ர ஆஸீத்?

किमपि उक्तवान् वा ? - ஏதாவது சொன்னானா?
கிமபி உக்தவான் வா ?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

कुतः आनीतवान् ? - எங்கிருந்து கொண்டு
குதः ஆனிதவான்? வந்தான்? (வந்தாய்)

अन्यत् किमपि कार्यं - வேறு ஒன்றும் வேலை
नास्ति । இல்லை.
அன்யத் கிமபி கார்யம்
நாஸ்தி.

मम वचनं श्रुणोतु । - என் பேச்சைக் கேள்.
மம வசனம் ச்ருணோது.

एतत् सत्यं खलु ? - இது உண்மைதானே?
ஏதத் சத்யம் கலு?

तद् अहमपि जानामि ।- அது எனக்கும் தெரியும்.
தத் அஹமபி ஜானாமி.

तावद् आवश्यकं न ।- அவ்வளவு தேவை
தாவத் ஆவச்யகம் ந. இல்லை.

भवतः कष्टं किम् ? - உங்களுக்கு என்ன
பவத: கஷ்டம்கிம்? கஷ்டம்?

किमर्थम् एतावान् - ஏன் இவ்வளவு தாமதம்?
विलम्बः ?
கிமர்த்தம் ஏதாவான்
விலம்ப:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

यथेष्टम् अस्ति । -	போதுமான அளவுக்கு
யதேஷ்டம் அஸ்தி	இருக்கிறது.
भवतः अभिप्रायः कः ? -	உங்களுடைய கருத்து
பவத: அபிப்ராய: க:?	என்ன?
तस्य किं कारणम् ? -	அதற்கு என்ன காரணம்?
தஸ்ய கிம் காரணம்?	
स्वयमेव करोति किम् ? -	தானாகவே
ஸ்வயமேவ கரோதி கிம்?	செய்கிறானா?
तत् मह्यं न रोचते । -	அது எனக்குப்
தத் மஹ்யம் ந ரோசதே.	பிடிக்கவில்லை.
उक्तम् एव वदति सः । -	அவன் சொன்னதையே
உக்தம் ஏவ வததி ஸ:	சொல்கிறான்.
अन्यथा बहु कष्टम् । -	இல்லையென்றால்
அன்யதா பஹு கஷ்டம்	மிகவும் கஷ்டம்.
किमर्थं पूर्वं न उक्तवान् ?-	ஏன் முன்பே
கிமர்த்தம் பூர்வம் ந	சொல்லவில்லை?
உக்தவான்?	
स्पष्टं न जानामि । -	எனக்குத் தெளிவாகத்
ஸ்பஷ்டம் ந ஜானாமி.	தெரியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

निश्चयः नास्ति । - தீர்மானமாகவில்லை.
நிச்சய: நாஸ்தி

भवान् कुत्र आसीत् ? - நீங்கள் எங்கு
பவான் குத்ர ஆஸீத்? இருந்தீர்கள்?

भीतिः मास्तु । - பயப்பட வேண்டாம்.
பீதி: மாஸ்து.

भयस्य कारणं नास्ति । - பயப்பட காரணமே
பயஸ்ய காரணம் நாஸ்தி. இல்லை.

तदहं बहु इच्छामि । - அது எனக்கு மிகவும்
ததஹம் பஹு இச்சாமி. பிடிக்கும்.

कियत् लज्जास्पदम् । - எவ்வளவு வெட்கக்
கியத் லஜ்ஜாஸ்பதம். கேடான விஷயம்.

एषः मम दोषः न । - இது என் தவறு
ஏஷ: மம தோஷ: ந. அல்ல.

मम तु आक्षेपः नास्ति । - எனக்கு மறுப்
மம து ஆக்ஷேப: நாஸ்தி. பொன்றும் இல்லை.

सः शीघ्रकोपी । - அவர் முன்கோபி.
ஸ: சீக்ரகோபி.

गर्वः मा भवतु । - கர்வம் கூடாது
கர்வ: மா பவது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

आगतः एषः वराकः	-	வந்து தொலைந்தான்
ஆகத: ஏஷ: வராக:		துஷ்டன்.
युक्ते समये आगतवान् ।	-	சரியான நேரத்தில்
யுக்தே சமயே		வந்து விட்டாய்.
ஆகதவான்.		(வந்துவிட்டான்)
बहु जल्पति भोः ।	-	அதிகம் பேசுகிறான்
பஹு ஜல்பதி போ:		ஐயா
एषा केवलं किंवदन्ती ।	-	இது வெறும்
ஏஷா கேவலம் கிம்வதந்தீ.		புரளிதான்.
किमपि न भवति ।	-	எதுவும் நடக்காது/
கிமபி ந பவதி		இருக்காது.
इदानीमेव आगतवान् ।	-	இப்பொழுதுதான்
இதானீமேவ ஆகதவான்.		வந்தான்/வந்தேன்
विना कारणं किमर्थं	-	காரணமே இல்லாமல்
गन्तव्यम् ?		ஏன் போக வேண்டும்?
வினா காரணம்		
கிமர்த்தம் கந்தவ்யம்?		
भवतः वचनं सत्यं ।	-	உங்களுடைய
பவத: வசனம் சத்யம்		வார்த்தை உண்மை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मम वचनं कः श्रुणोति? - என் பேச்சை யார்
மம வசனம் க: கேட்கிறார்?
ச்ருணோதி?

तदा किमपि न स्फुरितम् ।- அப்பொழுது ஒன்றுமே
ததா கிமபி ந ஸ்புரிதம். தோன்றவில்லை.

किमर्थं तावती चिन्ता ? - எதற்கு இவ்வளவு
கிமர்த்தம் தாவதீ சிந்தா? யோசனை?

भवतः कष्टम् अस्ति वा?- உங்களுக்குக்
பவத: கஷ்டம் கஷ்டமாயிருக்கிறதா?
அஸ்தி வா?

शुभाशयाः வாழ்த்துக்கள்
சுபாசயா:

नववर्षस्य शुभाशयाः - புத்தாண்டு வாழ்த்துக்கள்.
நவவர்ஷஸ்ய சுபாசயா:

नववर्षं नवोत्साहं ददातु - புத்தாண்டு
நவவர்ஷம் புத்துணர்ச்சி தரட்டும்.
நவோத்ஸாஹம் ததாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

नववर्षं नवहर्षम् आनयतु । - நவவர்ஷம் நவஹர்ஷம் ஆனயது.	புத்தாண்டு புது மகிழ்ச்சி கொண்டு வரட்டும்.
मकरसङ्क्रान्ति शुभाशयाः - மகரஸங்க்ராந்தி சுபாசயா:	பொங்கல் வாழ்த்துக்கள்.
युगादि शुभाशयाः - யுகாதி சுபாசயா:	யுகாதி வாழ்த்துக்கள்.
दीपावली शुभाशयाः - தீபாவளி சுபாசயா:	தீபாவளி வாழ்த்துக்கள்.
वैवाहिकजीवनं शुभमयं भवतु । - வைவாஹிகஜீவனம் சுபமயம் பவது.	இல்லறம் இனிதே சிறக்க வாழ்த்துக்கள்.
सफलतायै अभिनन्दनम् । - ஸபலதாயை அபிநந்தனம்	வெற்றி பெற வாழ்த்துக்கள்.
कार्यक्रमः यशस्वी भवतु । - கார்யக்கிரம: யசஸ்வீ பவது.	நிகழ்ச்சி சிறப்பாக இருக்கட்டும்.
चिरञ्जीवी भव/आयुष्मान् भव - சிரஞ்ஜீவீ பவ/ ஆயுஷ்மான் பவ	பல்லாண்டு வாழ்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

जन्मदिनस्य शुभाशयाः ।- ஜன்மதினஸ்ய சுபாசய:	பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
शुभयात्रा भवतु - சுபயாத்ரா பவது	பயணம் சுகமாக இருக்கட்டும்.
अहं संस्कृतं किञ्चित् - जानामि । அஹம் ஸம்ஸ்க்ருதம் கிஞ்சித் ஜானாமி.	எனக்கு ஸம்ஸ்க்ருதம் கொஞ்சம் தெரியும்.
अहं संस्कृतेन सम्भाषणं - करोमि । அஹம் ஸம்ஸ்க்ருதேன சம்பாஷணம் கரோமி.	நான் ஸம்ஸ்க்ருதத்தில் பேசுவேன்.
संस्कृतं भारतस्य - सांस्कृतिक भाषा । ஸ்ம்ஸ்க்ருதம் பாரதஸ்ய ஸாம்ஸ்க்ருதிக பாஷா.	ஸம்ஸ்க்ருதம் பாரதத்தின் கலாச்சார மொழி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

संस्कृतभाषा जाति-मत-प्रदेश भेदेन विना सर्वेषां भाषा ।

ஸம்ஸ்க்ருதம் ஜாதி - மத மாநில வித்தியாசமில்லாமல் அனைவரின் ஸம்ஸ்க்ருதபாஷா ஜாதி-மொழியாகும்.

மத - ப்ரேதச பேதேன வினா சர்வேஷாம் பாஷா.

संस्कृतं सामाजिक समरसतायाः साधनम् ।

ஸம்ஸ்க்ருதம் சமுதாய ஒற்றுமைக்கு கருவி.

ஸம்ஸ்க்ருதம் ஸாமாஜிக ஸமரஸதாயா: ஸாதனம்.

संस्कृतं संस्कृतमाध्यमेन पाठनीयम् ।

ஸம்ஸ்க்ருதத்தை ஸம்ஸ்க்ருதத்தின் மூலமாகத்தான் கற்பிக்க வேண்டும்.

ஸம்ஸ்க்ருதம் ஸம்ஸ்க்ருதமாத்யமேன பாடனீயம்.

संस्कृतभाषा पुनरपि व्यवहारभाषा जाता ।

ஸம்ஸ்க்ருதமொழி மீண்டும் பேச்சுவழக்கு மொழியாகிவிட்டது.

ஸம்ஸ்க்ருதபாஷா புனரபி வ்யவஹார பாஷா ஜாதா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேள்வி பதில்

இங்கு உங்களுக்கு உபயோகமான சில கேள்விகளும் அவற்றிற்குரிய விடைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை உங்களுக்குத் தீர்வு தரும் என்று நம்புகிறோம்.

கேள்வி: ஸம்ஸ்க்ருதம் கடினமான மொழியா?

பதில்: சிலர் ஸம்ஸ்க்ருதம் கடினம் என்று நினைக்கிறார்கள். மக்கள், எளிமையான ஸம்ஸ்கிருதத்தில் யாரும் பேசிக் கேட்டதே இல்லை என்பதே இதற்குக் காரணம். எந்த ஒரு மொழியும் கடினமோ சுலபமோ கிடையாது. எப்பொழுதுமே பேச்சு வழக்கில் இருக்கும் மொழி சுலபமாகவும், இலக்கியத்தில் உபயோகிக்கப்படும் மொழி கடினமாகவும் இருக்கும். இப்படியிருக்க ஸம்ஸ்க்ருத மொழி கடினம் என்ற எண்ணம் மக்கள் மனதில் எப்படிப் பதிந்தது? அதற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்கிருத மொழியைக் கற்பிக்கும் முறையே காரணம். கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக பாரதத்தின் ஆரம்பப் பள்ளியிலிருந்து ஆரம்பித்து பல்கலைக்கழகங்கள் வரை எல்லா இடங்களிலும் இலக்கண ரீதியாக மொழி பெயர்ப்புச் செய்தே கற்பிக்கும் வழக்கம் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த வழக்கம் பாரதீய வழக்கம் அல்ல. இது ஐரோப்பிய முறைக் கல்வி. ஸம்ஸ்க்ருத மொழியை ஹிந்தியிலோ, ஆங்கிலத்திலோ மற்றும் இதர மாநில மொழிகளிலோ கற்பிக்கும் முறை வழக்கத்தில் இருக்கிறது. ஸம்ஸ்க்ருதத்தின் மோசமான நிலைக்கு இதுவும் காரணம். அதனால் துவக்க நிலையிலிருந்து ஸம்ஸ்க்ருதத்தை ஸம்ஸ்க்ருதத்திலேயே கற்பிக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேள்வி: ஸம்ஸ்க்ருதம் எப்போதாவது பேச்சு வழக்கில் இருந்ததா?

பதில்: ஸம்ஸ்க்ருதம் முதலில் பேச்சு வழக்கு மொழியாகத்தான் இருந்தது. இதற்கு பதஞ்சலி மஹாபாஷ்யம் என்ற இலக்கண உரை நூலில் வேண்டிய அளவு உதாரணங்கள் இருக்கின்றன.

கேள்வி: அப்படியானால் இப்பொழுது ஸம்ஸ்க்ருத மொழி ஏன் நம் பேச்சு வழக்கில் இல்லை?

பதில்: அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. வரலாற்றுக் காரணங்கள் இருக்கலாம், மாநில மொழிகளில் மலர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். வெளி-நாட்டவரின் ஆட்சிக் காலத்தின் போது வெளிநாட்டு மொழியை ஆட்சி மொழியாக்கியதாலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருக்கலாம். வரலாற்றின் மத்திய கட்டத்தில் சமுதாய வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதனுடைய தீய பாதிப்பு ஸம்ஸ்க்ருதத்திலும் ஏற்பட்டது. இது போன்ற பல காரணங்களும் உள்ளன. வெள்ளையர்கள் பாரதத்தில் கொண்டு வந்த (மெக்காலே) கல்வி முறையும், ஸம்ஸ்க்ருதத்தின் இப்படிப்பட்ட நிலைக்குக் காரணம்.

கேள்வி: ஸம்ஸ்க்ருதம் ஒரு தனிப்பட்ட வர்கத்தின் மொழியா?

பதில்: அப்படி இல்லை. முன்பு ஸம்ஸ்க்ருதம் அனைவரின் மொழியாக இருந்தது. உதாரணமாக, ஆதிகவி வால்மீகி ஒரு வேடர். காளிதாசர் இடையர். மஹரிஷி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வியாஷர் மீனவப்பெண்ணின் மகன். ஸ்ரீ ஹர்ஷர், போஜராஜா போன்ற கவிஞர்கள் க்ஷத்ரியர்கள். இப்படி பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் ஸம்ஸ்க்ருத பேரறிஞர்களாய் இருந்திருக்கிறார்கள். அதனால் ஸம்ஸ்க்ருத மொழி அனைவரின் மொழியாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸம்ஸ்க்ருத ஸம்பாஷண இயக்கம்

ஜாதி - மத - வட்டார - இன - மொழி - வடக்கு - தெற்கு போன்ற வித்தியாசங்களை மறந்து அனைவருக்கும் ஸம்ஸ்க்ருதத்தை கற்பிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கம்.

கேள்வி: பாரதீயர்கள் அனைவரும் ஸம்ஸ்க்ருதம் ஏன் கற்க வேண்டும்?

பதில்: தமிழ் பேசுபவர்கள் தமிழர்கள் என்றும், மலையாளம் பேசுபவர்கள் மலையாளிகள் என்றும், ஹிந்தி பேசுபவர்கள் வடநாட்டவர்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றும் இன்று அழைக்கப்-
படுகிறார்கள். அப்படியானால்
பாரதீயர்கள் என்று யாரைத்தான்
நாம் குறிப்பிட முடியும்? இந்தக்
கேள்விக்கு ஒரே பதில்தான் இருக்க
முடியும், அனைவருமே
ஸம்ஸ்க்ருதத்தில் பேசினால்
அப்போது மொழி வேறுபாடின்றி
பாரதீயர்கள் ஆவார்கள்,
மேலைநாடுகளுக்கு சென்ற நமது
தலைவர்களிடம் அவர்களை
ஸம்ஸ்க்ருதத்தில் பேச சொன்ன பல
சம்பவங்கள் கடந்த ஆண்டுகளில்
நடந்துள்ளன என்பது நாம்
அறிந்ததே. இப்படிப்பட்ட
சம்பவங்கள், பாரதம் என்றால்
அதன் அடையாளம் வேதமும்,
ஸம்ஸ்க்ருதமுமே என்ற நம்பிக்கை
உலக சமுதாயத்தின் மனத்தில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆழப்பதிந்துள்ளது. ஸம்ஸ்க்ருதத்தின் புத்தெழுச்சி இன்றியமையாததாகும். இதற்கு மேலும் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கூற வேண்டுமெனில் அதற்காகவே ஒரு தனி நூல் வெளியிட வேண்டியிருக்கும்.

கேள்வி: பேச்சு வழக்கு மொழி ஸம்ஸ்க்ருதம் ஆகிவிட்டால் தமிழ் மொழியின் நிலை.....?

பதில்: தமிழ்மொழிக்கு இதைவிட அதிகப் பிரச்சாரம் ஏற்படும். ஸம்ஸ்க்ருத மொழி மற்ற எல்லா மொழிகளையும் நிறைவு செய்வது. ஸம்ஸ்க்ருதம் தமிழ் மொழிக்கோ, தெலுங்கு மொழிக்கோ, மராட்டிக்கோ, வங்காளிக்கோ,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பஞ்சாபி மொழிக்கோ மற்றும் எந்த பாரதீய மொழிக்கோ மாற்றாக இருக்காது. ஸம்ஸ்க்ருதத்திற்கு இதைவிட இன்னொரு விசேஷமான இடம் இருக்கிறது. எல்லா பாரதீய மொழிகளுக்கும், எல்லா மாநில மொழிகளுக்கும் சமமான கலாச்சார மொழி ஸம்ஸ்க்ருதம். ஸம்ஸ்க்ருத மொழி மற்ற எந்த மொழிக்கும் போட்டியோ அல்லது எதிரியோ அல்ல.

கேள்வி: ஸம்ஸ்க்ருதம் கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் ஆகும்?

பதில்: ஸம்ஸ்க்ருதம் கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் ஆகும் என்பது, நீங்கள் எவ்வளவு நேரம் தருகிறீர்கள், எவ்வளவு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விருப்பத்தோடு நீங்கள் கற்கிறீர்கள் என்பதைப் பொருத்தே இருக்கிறது. உரையாடல் மூலம் நீங்கள் கற்பீர்களானால் இரண்டு மூன்று மாதங்களிலேயே சிறந்த முறையில் கற்க முடியும். இதற்கு நீங்கள் (सम्भाषण सन्देश:) ஸ்ம்பாஷண ஸந்தேஷஹ என்ற மாதப் பத்திரிக்கையைப் பயன்படுத்தலாம். அதைப் படித்தும் நீங்கள் மொழியைக் கற்கலாம்.

கேள்வி: ஸம்ஸ்க்ருதத்தைச் சுலபமாக்குவது தேவையா ?

பதில்: நிச்சயமாக இல்லை. ஸம்ஸ்க்ருதத்தைச் சுலபமாக்க அவசியமே இல்லை. சுலப ஸம்ஸ்க்ருதம், சுலபமாக்கப்பட்ட ஸம்ஸ்க்ருதம் இவை இரண்டிற்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்தியாசம் இருக்கிறது.. ஸம்ஸ்க்ருதத்தை சுலபமாக்குவது என்றால் அதில் உள்ள விதிகளை மாற்றுவதே ஆகும். அதாவது வழக்கத்தில் இருக்கும் விதிகளை விட்டு விடுவது என்பதேயாகும். இப்படிச் செய்தால் ஸம்ஸ்க்ருதத்தின் வடிவமே உருக்குலைந்து விடும். இப்படிச் செய்வது நமது உத்தேசமல்ல. ஸம்ஸ்க்ருதத்திற்கு பாணினி தந்த தன்மையையும், ஸம்ஸ்க்ருதத்திற்கே உரிய தன்மையையும் காப்பதே நம் விருப்பம். பேச்சு வழக்கிற்கு உபயோகமாகச் சில சரளமான வழிகள் இருக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவற்றின் மூலமாக ஸம்ஸ்க்ருதத்தின் சுலபவடிவத்தைப் பிரசாரம் செய்து, நாம் சுலப ஸம்ஸ்க்ருதம் கற்பிக்க முடியும்.

கேள்வி: அரசாங்கம் எவ்வளவு முயற்சி செய்தாலும், பாரத தேசத்தில் ஹிந்திப் பிரசாரம் வெற்றி பெறாத போது, ஸம்ஸ்க்ருதத்தைக் கற்பிப்பது நடக்காத ஒன்று என்று தோன்றவில்லையா?

பதில்: ஒரு புது மொழியைக் கற்பிக்கும் போது ஏற்படும் சிரமங்கள் கூட ஸம்ஸ்க்ருத மொழியைக் கற்பிக்கும் போது ஏற்படாது. ஏனென்றால் எல்லா பாரதீய மொழிகளிலும் ஸம்ஸ்க்ருத வார்த்தைகள்தாம் அதிகம். பாரதீய மொழிகளின் வாக்கிய அமைப்பு முறையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதத்தை ஒட்டியே இருக்கின்றன. எல்லா மொழிகளின் உச்சரிப்பு முறையும் ஸம்ஸ்க்ருதத்தை ஒட்டியே அமைந்திருக்கின்றன. பாரம்பரியம் காரணமாக, ஒவ்வொரு பாரதவாசிக்கும் சிறுவயதிலிருந்து ஸம்ஸ்க்ருதம் கேட்டுக் கேட்டு அது மனதில் பதிந்திருக்கிறது. அதனாலேயே அனைவருக்கும் ஸம்ஸ்க்ருதம் மறைமுகமாகத் தெரிந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். பாரத தேசத்தில், படித்தவர்களில் 20% பேர் மாணவப் பருவத்தில் ஸம்ஸ்க்ருதம் படித்தவர்கள். அதனால் சற்றே பயிற்சி செய்தால் ஸம்ஸ்க்ருதத்தில் உரையாட முடியும். இன்னொரு விஷயம் பாரததேசம் முழுவதிலும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எங்குமே ஸம்ஸ்க்ருதத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. பாரததேசத்தில் கடந்த 200 வருடங்களாக ஆங்கிலம் கற்பிக்க எடுத்துக் கொண்ட முயற்சி மற்றும் பணச் செலவில் ஒரு சதவீதம் அளவு ஸம்ஸ்க்ருதத்தை கற்பிக்கச் செலவிட்டாலே பத்து மடங்கு பலன் கிடைக்கும்.

கேள்வி: ஸம்ஸ்க்ருதத்தின் எதிர்காலம் எப்படி?

பதில்: ஸம்ஸ்க்ருதத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் இருகிறது. தேசம் முழுவதும் எல்லா இடத்திலும் ஸம்ஸ்க்ருதம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. உலகத்தில் 35 நாடுகளில்

CC-0. In Public Domain. Siddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதம் படிக்கிறார்கள். 110 விஞ்ஞான ஆராய்ச்சி மையங்களில் ஸம்ஸ்க்ருத அறிவியல் நூல்கள் பற்றி ஆராய்ச்சி நடைபெறுகிறது. கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் ஸம்ஸ்க்ருதம் படிக்க ஆரம்பித்துள்ளனர். பாரதத்தில் தற்போது 70 இலட்சம் மக்கள் ஸம்ஸ்க்ருதம் படிக்கிறார்கள். மொத்தம் 8 ஸம்ஸ்க்ருத பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதுபோல் எண்ணற்ற உதாரணங்கள். வரும் 5-10 வருடங்களில் ஸம்ஸ்க்ருதத்தின் வளர்ச்சியில் அபார மாற்றம் ஏற்படவிருக்கிறது. இனி வரும் நூற்றாண்டு ஸம்ஸ்க்ருத நூற்றாண்டு என்பது பெரியோர் வாக்கு.

* * *

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருத பாரதி:

- இது பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பு
- இதன் தலைமை அலுவலகம் தில்லியில் உள்ளது.

முக்கிய நோக்கங்கள்:

- ஸம்ஸ்க்ருதத்தில் பேசுதல், போதித்தல், உரையாடுதல்களின் மூலமாக ஸம்ஸ்க்ருதத்தைப் பரப்புதல்.
- ஸம்ஸ்க்ருதத்தை மீண்டும் அன்றாட வாழ்வில் பேச்சு வழக்கில் கொண்டு வருதல்.
- ஸம்ஸ்க்ருத்தை ஸம்ஸ்க்ருதம் மூலமாகவே கற்பிப்பதற்குப் புதுப்புது திட்டங்களை வகுத்தல்.
- மதம், ஜாதி, சமயம், மொழி சமுதாய அந்தஸ்து போன்ற வேற்றுமைகளை அகற்றி, சமுதாய ஒற்றுமையையும், தேச ஐக்யத்தையும் கொண்டு வருதல்.
- பாரதத்தின் கலாச்சார மேம்பாட்டைக் கொண்டு வருதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

- 50 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 5000 வீடுகளில் ஸம்ஸ்க்ருதத்தைத் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.
- 4 கிராமங்கள் ஸம்ஸ்க்ருத கிராமங்களாக மாற்றப்பட்டுள்ளன.
- பேச்சுமுறை ஸம்ஸ்க்ருதத்தை எளிமையான வழியில் கற்பிப்பதற்கென இதுவரை கண்டிராத முற்றிலும் புதியதோர் முறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மற்ற வெளிநாடுகளிலும் **ஸம்ஸ்க்ருத பாரதி** செயல்பட்டு வருகிறது.
- இன்டர்நெட் முகவரியும் உள்ளது.
- நிகழும் நூற்றாண்டிலேயே ஸம்ஸ்க்ருதத்தின் தற்போதைய நிலையை மேலும் மேம்படுத்துவதற்கான பரவலான திட்டங்களைத் தீர்மானித்தலும், அதனை செயல்படுத்துவதற்கான முயற்சியை மேற் கொள்வதும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முக்கிய செயல்கள்:

- பத்து நாள்களில் (தினம் இரண்டு மணி நேரம்) பேச்சு வழக்கு ஸம்ஸ்க்ருதத்தைக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- ஸம்ஸ்க்ருத ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- முழு நேரமும் ஸம்ஸ்க்ருதத்திற்காக உழைப்பவர்களை ஊக்கப்படுத்துதல்.
- குடிசைப்பகுதிகளில் ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடத்துதல்.
- பல புத்தகங்களும், பத்திரிக்கையும் வெளியிடுதல்.
- அஞ்சல் வழி ஸம்ஸ்க்ருதக் கல்வி நடத்துதல்.

சிறப்பம்சங்கள்:

- இதுவரையில் 50 இலட்சம் மக்களுக்கு மேல் ஸம்ஸ்க்ருதத்தில் பேசக் கற்றுள்ளனர்.
- 10,000 ஆசிரியர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஸம்ஸ்க்ருத பாரதியின் இணையதளம்.

www.samskrita-bharathi-org

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதம் பயில

படியுங்கள்

ஸம்பாஷண ஸந்தேசம்

(மாதாந்திர பத்திரிக்கை)

* ஸரள ஸம்ஸ்க்ருதம்

* கதைகள், கட்டுரைகள், செய்திகள், இலக்கணம், விஞ்ஞானச் செய்திகள் மற்றும் பல.

* பல வண்ணங்களுடன்

பத்திரிக்கை விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

"அக்ஷரம்"

கிரிநகர் 2-வது பேஸ்,

8-வது குறுக்கு ரோடு,

பெங்களூர் - 560 085.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதம் பயில வேண்டுமா?

வீட்டிலிருந்தபடியே எளிதில் கற்க...

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

அஞ்சல்வழி ஸம்ஸ்க்ருதம்

ஸம்ஸ்க்ருத பாரதி (தமிழ்நாடு) ட்ரஸ்ட்

282, ரயில்வே பீடர் ரோடு,

P.A.C.R. பவனம் முதல் மாடி, நாடார் பள்ளி அருகில்,

இராஜபாளையம் - 626 117.

விருதுநகர் மாவட்டம்.

தொலைபேசி : 04563 - 231027

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருத பாரதியின் எதிர்காலத் திட்டங்கள்:

- மாலை நேர ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடத்துதல்.
- அனைத்துப் பாடங்களையும் ஸம்ஸ்க்ருதத்தில் கற்பிக்கும் வித்யாலயங்களை உருவாக்குதல்.
- பல்லாயிரக்கணக்கான ஸம்ஸ்க்ருதம் பேசும் இல்லங்களை உருவாக்குதல்.
- ஸம்ஸ்க்ருதம் பேசும் கிராமங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்துதல்.
- ஓலைச்சுவடியில் உள்ள விஞ்ஞான விஷயங்களை மக்களுக்கு எடுத்து விளக்கும் மையங்களை உருவாக்குதல்.
- ஸம்ஸ்க்ருதம்-தமிழ் புஸ்தகங்களை வெளியிடுதல்
- ஸம்ஸ்க்ருதம்-விஞ்ஞானம் பற்றி ஆய்வு செய்து நூல்களை வெளியிடுதல்.
- சாஸ்திர நூல்களைக் கற்பதற்கு உதவி செய்தல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதத்தை அனைவருக்கும்
கற்பித்தலைச் சேவையாகச் செய்து வருகிறது
ஸம்ஸ்க்ருத பாரதி

இந்த அறப்பணிக்குத் தங்களால் இயன்ற அளவு நிதி உதவி அளிக்கலாம். தாங்கள் தரும் நன்கொடைக்கு 80G. வரிவிலக்கு வசதியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.